1970 மார்ச் 23]

(ஆ) நில உச்சவரம்புக் குறைப்பை எதிர்த்து நிலவுடைமையாளர்கள் நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. அ. சுப்பராஜா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருவாரூரில் நில உடமையாளர்கள் கூடி, நில உச்சவரம்புக் குறைப்பை சட்டமாகக் கொண்டு வருவதற்கு முன்பு, அவர்களைக் கலந்துகொள்ளாத காரணத்தைச் சுட்டிக்காட்டி, இனி அவர்கள் நிலவரி கொடுப்பதில்லையெனவும், குறுவைப் பயிரிடுவதை நிறுத்தி விடுவதெனவும் முடிவு செய்ததினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் அதனால் மக்களுக்கு ஏற்படும் பின் விளைவுகளையும் பற்றி விவாதிக்க என்றும் அதை விவாதிப்பதற்காக சபையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்றும் கொடுத்து இருக்கிறார்கள்.

இதுவும் அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினாலே அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) ஆரணியாறு ரிசர்வாயரின் நீர்ப்பங்கீடு குறித்து தமிழ்நாடு—ஆந்திர மாநிலங்களிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'The dispute that has arisen between Tamil Nadu and Andhra Pradesh regarding the sharing of irrigation water from Araniyar Reservoir consequent to the implementation of the Pataskar Award' என்று திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இதுவும் அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரணத்தினால், இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

4. அமைச்சரின் விளக்க உரை.

தமிழ்நாடு பரிசுச் சீட்டின் புத்தாண்டு சிறப்புப் பரிசுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்பேரவை விதி 82-ன் கீழ் இப்பேரவைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் 19-வது குலுக்கல் 1970 எப்ரல் திங்களில் நடத்தப்படும். குலுக்கல் தேதி 30-4-70 வியாழக் கிழமை, எப்ரல் மாதம் தமிழ்ப் புத்தாண்டு நாளோடு இணைந்த மாதம். எனவே இந்தக் குலுக்கலில் சில ஈடு இணையற்ற சிறப்புப் பரிசுகளைத் தர அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சிறப்புப் பரிசுகள் ஏற்கனவே ஒவ்வொரு தொடருக்கும் உள்ள ரூ. 3,50,000 பரிசுகள் தவிர கூடுதலாகத் தரப்படும் பரிசுகளாகும். இந்தக் குலுக்கலில் 10 தொடர்களை (EL முதல் EU வரை) வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொடருக்கு ரூ. 3,50,000 வீதத்தில், அந்த 10 தொடர்களுக்கும் வழக்கமான ரூ. 35,00,000 பரிசுகள் உண்டு. அத்துடன் இந்த 10 தொடர்களுக்கும் பொதுவாக ரூ. 25,00,000 மதிப்பில், கீழ்க்கண்ட 7 சிறப்புப் பரிசுகள் இருக்கும்.

	ரூ.
ஒரு முதல் சிறப்புப் பரிசு	10,00,000
ஒரு இரண்டாவது சிறப்புப் பரிசு	5,00,000
ஐந்து மூன்றாவது சிறப்புப் பரிசுகள் .. ஒவ்வொன்றும் ரூ. 2,00,000 வீதத்தில்	10,00,000
ஆக 7 சிறப்புப் பரிசுகள் ..	25,00,000